# சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை 2020-2021 ஆம் நிதி ஆண்டு ஆண்டு அறிக்கை

தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-இல் ஆணையிடப்பட்டவாறு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 535/எம்.2/2017, நாள். 26.10.2017-இன்படி சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்ட அறக்கட்டளை பத்திரமானது 01.11.2017 அன்று தயார் செய்யப்பட்டு, ஆவண எண். BKIV/36, நாள்.01.11.2017-இன்படி சிவகங்கை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ. எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை | 1 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை. |
| 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. | 2 | மாவட்ட வருவாய் அலுவலர், சிவகங்கை. |
| 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. | 3 | உதவி இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சிவகங்கை. |
| 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. | 4 | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சிவகங்கை. |
| 5 | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) | 5 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. |
| 6 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சிவகங்கை. | 6 | முதன்மைக் கல்வி அலுவலர், சிவகங்கை. |
| 7 | மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர், சிவகங்கை. | 7 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. |
| 8 | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சிவகங்கை. | 8 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. |
| 9 | மாவட்ட வன அலுவலர், சிவகங்கை. | 9 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள், சிவகங்கை. |
| 10 | முதன்மைப் பொறியாளர், (பொ.ப.து./ நீ.ஆ.அ), சிவகங்கை | | |
| 11 | உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, சிவகங்கை. | | |
| 12 | மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை. | | |
| 13 | மாவட்ட சமூக நல அலுவலர், சிவகங்கை. | | |
| 14 | துணை இயக்குநர், சுகாதாரபணிகள், சிவகங்கை. | | |
| 15 | இணை இயக்குநர், விவசாயம், | | |
| 16 | ஆய்வாளர், தொழிலாளர் நலத்துறை, சிவகங்கை. | | |

2) சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத வங்கிக் கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37301947887) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்டகனிம கட்டமைப்பிற்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

3) சிவகங்கை மாவட்டத்தில் 1 பெருங்கனிம குவாரியும், 17 சிறுகனிம குவாரி உரிமங்கள் நடப்பிலுள்ளன. இவற்றில் 09 சிறுகனிம குவாரி மற்றும் 1 பெருங்கனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு முன்னர் வழங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 30% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்படுகிறது. மேலும், 08 எஞ்சியுள்ள சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்கள் 12.01.2015 தேதிக்கு பின்னர் வழ்ங்கப்பட்டவையாதலால் அவற்றிற்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையானது கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

4) சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.3.2020 வரை வங்கி கணக்கில் ரூ.1,83,45,580/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து மூன்று இலட்சத்து நாற்பத்தைந்தாயிரத்து ஐந்நூற்று எண்பது மட்டும்) இருப்பில் உள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில் சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக கீழ்க்கண்ட பிற செலவினங்களுக்காக ரூ. 1,23,87,424/- செலவிடப்பட்டுள்ளது.

| வ. எண் | செலவின விவரம் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | 2020-2021 நிதியாண்டில் சென்னை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் அலுவலக செலவினங்களுக்காக 1% தொகை வழங்கப்பட்டது. | 60257/- |
| 2. | மாவட்ட கனிம அறக்கட்டளை தரவு பதிவு செய்பவரின் ஊதியத் தொகை. | 112000/- |
| 3. | வங்கி கட்டணத் தொகை | 6244/- |
| 4. | 2% வருமான வரிப் பிடித்தம் | 65219/- |
| 5. | விவசாயத் துறை சார்ந்த செலவினத் தொகை | 97976/- |
| 6. | குழாய் பதித்தல் மற்றும் நீர்பாசனம் | 77000/- |
| 7. | நீர்நிலைகளைத் தூர்வாரும் பணி மற்றும் ஜே.சி.பி ஓட்டுநர்களுக்கு ஊதியம். | 11165817/- |
| 8. | சீமைக் கருவேல மரங்களை அகற்றும் பணி. | 21253/- |
| 9. | இதர செலவினத் தொகை | 620243/- |
| 10. | CCTV கொள்முதல் செலவினத் தொகை. | 161415/- |
| | மொத்தம் | 1,23,87,424/- |

சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளையின் 2020-2021 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு கணக்குள் மத்திய அரசால் அங்கிகரிக்கப்பட்ட பட்டய கணக்காளர் VSK and Associates, காரைக்குடி மூலம் தணிக்கை செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையானது சிவகங்கை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை முன்பு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

32/35

தலைவர்,
சிவகங்கை மாவட்ட கனிம அறக்கட்டளை /
மாவட்ட ஆட்சித் தலைவர்,
சிவகங்கை.

03/04/23

3/4/23.